# எளிமை, வலிமை, இனிமை - இக் குண நலன்களின் கொள்கலன் மு.க.ஸ்டாலின் !

**“தமிழுக்கும் - தமிழ்நாட்டுக்கும் - தமிழினத்துக்கும் எதிரான எந்தச் செயல்பாடுகளும் நான் இருக்கும்வரைக்கும், தி.மு.க. இருக்கும்வரைக்கும், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும்வரைக்கும் இந்த மண்ணுக்குள் வரமுடியாது!” - இது இப்போது கடலூரில் எதிரொலித் திருக்கும் இடிமுழக்கம் !**

**இந்த வீரமும், விவேகமும், வேகமும், இன்று நேற்று தோன்றியதல்ல; பிறப்பிலேயே, தலைவர் மு.க.ஸ்டாலின் குருதியில் ஊறிக் கலந்தவை. “மொழிக்காக எதையும் இழக்கத் தயார்! இனத்திற்காகப் போராடுகிற நேரத்திலே, உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்கும் காத்திருக்கிறோம். நான் போய் விடுவதால், மொழிக்காக, இனத்துக்காகத் தனயனை இழந்த தந்தையென்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி என்னைச் சேரும் அல்லவா!” - இப்படி, தியாக ஆவேசம் பொங்கிப் பீறிட்டது, 1972ல், கோவையில், மாணவர் தி.மு.க. மாநாட்டில்; அது தூரத்து இடிமுழக்கம் !**

அன்று பத்தொன்பதே வயதை எட்டிப் பிடித்த முறுக்கேறிய இளைஞனுக்கும், இன்று எழுபத்திரண்டாவது வயதை எட்டிப் பிடித்திருக்கும் பரிபக்குவப்பட்ட பண்பான தலைவருக்கும், அடிப்படையில் மொழி - இனம் என்று அடையாளப் படுத்திட வேண்டிய அவசியம் நேருமானால், வயது ஒரு பொருட்டல்ல; அப்போது இளமையில் நெஞ்சத்தில் எரிந்து கொண்டிருந்த அதே நெருப்பு, இப்போதும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது என்பதற்கான எடுத்துக் காட்டாளர்தான் நம் திராவிட நாயகர்!

பள்ளி செல்லும் பருவத்திலே, ‘முரசொலி’ ஏட்டுக்காக அண்ணா, கலைஞர் உரைகளை ‘டேப்பில்’ பதிவு செய்யும் பணியைக் கருத்துடன் ஏற்று, அரசியல் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டவர். 1971 சட்டமன்றத் தேர்தலில் சைதைத் தொகுதியில், ஒலி பெருக்கி வாகனத்தில் ஏறி, “கலைஞர் வந்து கொண்டே இருக்கிறார். உங்களை நாடி வருகிறார். உங்களைக் காண ஓடி வருகிறார்” என்று அறிவித்த தொண்டராகத் தொடங்கியவர். கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.வைத் தொடங்கி நடத்தியவர்.

அவர்தான் பின்னர், படிப்படியாக - ஒவ்வொரு படியையும், உடல் உழைப்பாலும் உள்ளத்து உத்வேகத்தாலும், அங்குலம் அங்குலமாக அளந்து அளந்து, அவசரமின்றி, நின்று நிதானமாக, மேலேறி மேலேறி - இன்றைக்கு இந்த மாபெரும் மக்கள் இயக்கத்தின் மகத்தான தலைவராக, வாக்காளர்களின் மனங் கவர்ந்து, அவர்தம் பேராதரவைப் பெற்று, ‘திராவிட மாடல் ஆட்சி’யின் முதலமைச்சராக வலம் வருகிறார்! இத்தகைய உன்னதமான உயர்வுக்குப் பின்புலமாக இருப்பது, உழைப்பு - ஓய்வில்லாத உழைப்பு - எதையும் எதிர்பாராத, திராவிட இலட்சியம் ஒன்றையே தொலை நோக்காகக் கொண்ட, யதார்த்தமான உழைப்பு !



**“தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்”**

என்பதன்றோ அய்யன் திருவள்ளுவரின் செம்மொழி!

பிரம்மாண்டமாக வளர்ந்தோங்கி நிற்கும் விருட்சம் மட்டும்தான் பார்ப்போர் கண்ணுக்குத் தெரியும்; அதன் மண்ணுக்குள்ளே மறைந்திருக்கும் வேர்கள் தெரியாது. அவற்றைப் போன்றதுதான் நமது தலைவரும், அவருடைய உழைப்பும்!

**“தந்தையின் புகழொளியால் பெருமை கொள்ளும் உரிமையும் வாய்ப்பும் பிறப்புரிமையாலேயே பெற்றிருப்பினும், தகுதியினால் பெருமை கொண்டு, தியாகத்தால் உரிமை பெற்று, தொண்டினால் பதவி பெற்று, சாதனையால் புகழ் பெற்றவர் ஸ்டாலின். எண்ணித் துணிவது, துணிந்ததை உரைப்பது, உரைப்பதைச் செய்வது, விளைவினை ஏற்பது என்னும் பழக்கத்தால், பொதுத் தொண்டில் வெற்றி நடைபோடுபவர்” என்று இனமானப் பேராசிரியர், வெட்டி எடுத்த கட்டித்தங்கச் சொற்களால், இன்றைய நமது தலைவரைக் கச்சிதமாய்க் காட்சிப்படுத்தியிருக்கிறார்.**

நம் திராவிட முன்னோர் வழியில், முயற்சியுடன் அயர்ச்சி இன்றி உழைத்திடும் நம் தலைவர் மு.க.ஸ்டாலின், எளிமை - வலிமை இனிமை ஆகிய அருங்குணநலன்களை தமக்கான அரசியல் வழிமுறைகளாகக் கொண்டு இயங்கி வருகிறார்.

**“பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு அணியல்ல மற்றுப் பிற.**

**( அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்கு அணிகலன் வேறு இருக்க முடியாது)”** என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, பணிவான குணத்தையும், எல்லோரிடத்தும் இனிமையாகப் பேசும் இயல்பினையும் உடையவர் ஸ்டாலின் என்பதை நாடறியும். பணிவும், இனிமையும், எளிமையின் அடையாளங்கள்.

**“நனிநாகரிகத்தின் உச்சம் எளிமை”** (Simplicity is the ultimate form of sophistication ) **என்றார் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்.** இத்தகைய எளிமையை, திராவிட இயக்க முன்னோடிகளிடமிருந்து பாடமாக எடுத்துக் கொண்டவர் தளபதி ஸ்டாலின். பெரியாரின் எளிமையும், பணிவும் அனைவரும் அறிந்தவை. எவரிடத்தும் அவர் காட்டிவந்த பணிவும், தமது கருத்துகள் கடைசி மனிதனின் செவி வழிப் புகுந்து சிந்தையைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக, பேசும்போது அவர் கையாண்ட எளிமையும், திராவிட சரித்திரப் புகழ் வாய்ந்தவை. “நான் சாமானியன், சாமானியன்” என்று இறுதிவரை திரும்பத் திரும்பச் சொல்லி, தன்னை, ஏழை எளிய சாமானிய மக்களோடு அய்க்கியப்படுத்திக் கொண்ட எளிமையும் இனிமையும் மிக்கவர்



முனைவர்
**கி.இராஜமாணிக்கம்**
இ.ஆ.ப. (பணி நிறைவு),
முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளர்.

பேரறிஞர் அண்ணா. பகைவரிடத்தும் மனிதநேயப் பணிவு காட்டி, பாசத்தைப் பொழிந்து, எளிமையைப் போற்றிய இனிய பண்பாளர் கலைஞர். இப்படி, எளிமையும், இனிமையும் வழிவழி வந்த வாய்ப்பாகப் பெற்றிருப்பவர் தலைவர் ஸ்டாலின் !

சட்டப் பேரவையில், பெரியார் - அம்பேத்கர் - அண்ணா பெயர்களைச் சொல்ல மறுத்து ஆளுநர் ஆர்.என்.ரவி அநாகரிகமாக வெளியேறிய போதுகூட, சிறிய புன்னகை ஒன்றை உதிர்த்து, நாகரிகத்தின் உச்சத்தில் நின்றவர் நமது ஸ்டாலின். **“இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்பதைவிட, இந்தியாவின் முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்பதை எட்டுவதே நமது இலக்கு”** என்று எந்த நிலையிலும், தம்மை முன்னிலைப் படுத்திக்கொள்ள எண்ணாத எளிமை, நமது முதல்வரின் தனிக் குணம்!

“சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றுகிறோம்” என்று சொன்னதில் எளிமை; “தீயவற்றை விலக்கிவிட்டு நல்லதை எடுத்துக் கொள்வேன்” - “மாநில அரசின் திட்டம், ஒன்றிய அரசின் திட்டம், முந்தைய அரசின் திட்டம் என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்” - கூட்டணிக் கட்சிகளின் ஒரு சில விமர்சனங்களை வைத்து அரசியல் செய்யலாம் என்று நினைத்த அவசரக்காரர்களுக்கு விடையாக, “கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளை நான் ஆலோசனையாகத்தான் பார்க்கிறேன்” - போன்ற முதலமைச்சரின் அறிவிப்புகளில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த எளிமையும், இனிமையும், **“ஸ்டாலின் ப்ராண்ட்”** எனப் போற்றிப் பாராட்டத் தக்கவை, எதையும் எவரையும் எடுத்தெறிந்து பேசும் எண்ணம் கிஞ்சிற்றும் இல்லாதவை என்பதிலே எள்ளளவும் அய்யமில்லை.

கோடிக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட மாபெரும் மக்கள் இயக்கம் தி.மு.க. பவளவிழா கண்டு, பாரதிர நடை போடும் கட்சி தி.மு.க. ஆறாவது முறையாகத் தமிழ்நாடு ஆட்சி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் அரசியல் கட்சி என்ற வலிமையும், பெருமையும் முதலமைச்சருக்கு உண்டு. எனினும், கர்வம் சிறிதும் கொள்ளாமல், வேண்டுமென்றே தீண்டுபவர்களையும், சீண்டிப் பார்ப்பவர்களையும் பார்த்து, “திருந்துங்கள்; இல்லையென்றால் திருத்தப்படுவீர்கள்!” - “தி.மு.க. என்றென்றும் மாநில உரிமைகளுக்கான போராளி” - “இன்றைக்கு நாங்கள், முன்மொழிவதை நாளைக்கு இந்தியாவே வழிமொழியும்” - “வஞ்சிப்பது உங்கள் வழக்கம்; வாழ வைப்பது எங்கள் பழக்கம்”- போன்ற ஜனநாயக ரீதியிலான அவருடைய பிரகடனங்கள், “விமர்சனங்கள், ஒரு தலைவரை மேலும் வலிமைப்படுத்துகின்றன” எனும் பொன்மொழியை நினைவூட்டுவதாகவே உள்ளன.

**தொண்டர், செயலாளர், தளபதி, தலைவர் என்ற நிலைகளையெல்லாம் கடந்து, இன்றைக்குத் தமிழ்நாட்டில், இளைய சமுதாயத்தினர், மாணவ - மாணவியர், சிறுவர் - சிறுமியர் அனைவரும் “அப்பா” என்றே அழைத்து ஆனந்தம் கொண்டாடுகின்றனர்; அடுத்தடுத்த தலைமுறைக்கும் கழகம் எடுத்துச் செல்லப்படுவதை உத்தரவாதப்படுத்துகின்றனர் !**

“மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு” என்று உணர்த்திய பெரியாரைத் “தந்தை” என்றும்; சமூக சீர்திருத்தத்தைச் சட்டமாக்கிய அண்ணல் அம்பேத்கரை “பாபாசாஹேப்” (மதிப்பிற்குரிய தந்தை) என்றும்; மதச் சார்பற்ற மனிதாபிமானி - சமூக ஜனநாயகவாதி பண்டித நேருவை “சாச்சா நேரு” என்றும்; “தம்பி” என்றழைத்து லட்சோப லட்சம் தம்பிமார்களை நாள்தோறும் தகுதிப் படுத்தி வந்த அண்ணாவை “அண்ணன்” என்றும்; கலையில் அரசியலையும், அரசியலில் கலையையும் கலந்து, காலமெல்லாம் மக்களின் கருத்தைக் கவர்ந்த முத்தமிழறிஞர் கலைஞரை “உடன்பிறப்பு” என்றும்; பதிவேற்றிப் போற்றி வரும் வரலாறு, எளிமை - வலிமை - இனிமை ஆகிய குணநலன்களின் கொள்கலனாக விளங்கும் நம் திராவிடச் செம்மலை “அப்பா” என்றே பதிவு செய்யும்!

**தலைவர் வாழ்க ! முதலமைச்சர் வாழ்க! “அப்பா” வாழ்க !**